செய்தி வெளியீடு :430 நாள். 07.09.2016

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சி தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் திரு. K.T. ராஜேந்திர பாலாஜி அவர்கள் தலைமையில் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பால்வள திட்டங்கள் குறித்த ஆய்வு கூட்டம் இன்று (7.9.2016) தலைமை செயலகத்தில் நடைபெற்றது, இக்கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன் வளத்துறை அரசு செயலர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., பால் வளத்துறை ஆணையர் மற்றும் ஆவின் நிர்வாக இயக்குநர் திரு. சுனீல் பாலீவால், இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சி தலைவி அம்மா அவர்களின்ஆணையின்படி செயல்படுத்தப்பட்ட பால் வள திட்டங்களின் பயனாக கடந்த 03.08.2016 அன்று ஆவின் பால் கொள்முதல் 31.77 இலட்சம் லிட்டராக உயர்ந்து சரித்திர சாதனை படைத்துள்ளது. மேலும் ஆவின் வளர்ச்சிக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுரை பால் பண்ணை வளாகத்தில் ரூ.45 கோடி செலவில் ஐஸ் கிரீம் தயாரிக்கும் தொழிற்சாலை மற்றும் விழுப்புரம் உளுந்தூர்பேட்டையில் ரூ.82 கோடி செலவில் பாலித்தீன் பை தயார் செய்யும் தொழிற்சாலையும் அமைக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்கள். இதற்கான நடவடிக்கைகள் உடனடியாக தொடங்கப்படவேண்டுமென்று அதிகாரிகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பால் விற்பனையை அதிகபடுத்துவதற்காக பல்வேறு வியாபார யுக்திகளை கடைப்பிடித்து பால் விற்பனை சென்னை மாநகரத்தில் நாளொன்றுக்கு 12 இலட்சம் லிட்டர் என்ற அளவிலும் மாவட்டங்களில் 11 இலட்சம் லிட்டர் என்ற அளவிற்கும் உயர்த்த தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் தமிழகத்தில் தற்போது

செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு பால் வளத் திட்டங்களின் தற்போதைய நிலை குறித்து விரிவாக ஆய்வு செய்து திட்டங்கள் குறிப்பட்ட கால கட்டத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என்றும், வரும் பண்டிகை நாட்களில் நுகர்வோர்களுக்கு தங்கு தடையின்றி பால் மற்றும் பால் பொருட்கள் கிடைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பினை தொடர்ந்து சென்னை மாநகரில் 5 அதி நவீன பாலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும்,11 இடங்களில் நிறுவப்படவுள்ள அதி நவீன பாலகங்களின் தற்போதைய நிலை குறித்து ஆய்வு செய்து இப்பாலகங்கள் விரைவில் முடிக்கப்பட வேண்டும் என்றும், நுகர்வோர் நலனை கருத்தில் கொண்டு நாளொன்றுக்கு 13.50 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்வதற்காக சென்னை மாநகரில் அமைந்துள்ள அம்பத்தூர், மாதவரம் மற்றும் சோழிங்கநல்லூர் பால் பண்ணையின் கையாளும் ளதிறனை அதிகரிக்க செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களின் தற்போதைய நிலை குறித்தும் ஆய்வு செய்த அமைச்சர் அவர்கள் இத்திட்டங்கள் விரைவாக முடிக்கப்பட வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் ஆவின் இணை நிர்வாக இயக்குநர் திரு. எஸ். ஜெயக்குமார், துணை பால் ஆணையர் திரு. சண்முகராஜ் குமார், பொது மேலாளர் (நிர்வாகம்) திரு. பி. பிரபாகர், பொது மேலாளர் (நிதி) திரு.சி.ரவி, பொது மேலாளர் (பொறியியல்) திரு. சி. லோகி தாஸ், பொது மேலாளர் (விற்பனை) திரு. எஸ். கே. கதிர்வேலு மற்றும் ஆவின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**